தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

பதிவுஅலுவலகம் : LLA கட்டிடம், முதல்தளம், 735, அண்ணா சாலை

சென்னை 600002

CIN:U31501TN1983SGC009836

தொலைபேசி 044 28412003 மின்னஞ்சல் tnielmf@gmail.com

தபால் வாக்கு அறிவிப்பு

(நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் 110, நிறுவன விதிகள் (மேலான்மை மற்றும் நிர்வாகம்) விதி 20 மற்றும் 22 உடன் இணைந்து பிரிவுக்கு இணக்கமாக)

அன்பார்ந்த உறுப்பினர் அவர்களுக்கு,

நிறுவனச்சட்டம் 2013 ("சட்டம்") பிரிவு 110 மற்றும் அவற்றில் வழங்கப்பட்டுள்ள பொருத்தமான இதர நிபந்தனைகள் ஏதாவது இருந்தால் அவை, மற்றும் நிறுவன விதிகள் 2014. (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) தொடர்பாக அந்த நேரத்தில் அமலில் உள்ள அதில் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படியான திருத்தங்கள் அல்லது மறு நிறைவேற்றம் உட்பட, அத்துடன் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் ("MCA") வழங்கப்பட்ட ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020, செப்டம்பர் 28 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 33/2020, 31.12:2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.39/2020 ஆகியவற்றையும் இணைத்து அதன் அடிப்படையில் இந்த அறிவிப்பு அளிக்கப்படுகிறது. இதன் கீழ் இணைக்கப்பட்டுள்ள தீர்மானம், மின்னியல் வாக்களிப்பு மூலமாக மட்டுமே தபால் வாக்குகளாக அளிக்கப்பட்டு சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. பங்குதாரர்கள் தொலைதூர மின்னியல் வாக்களிப்பு தொடர்பான அறிவுறுத்தல்களை கவனமாக படித்துத் தெரிந்து கொள்ளுமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்களின் ஏற்பு அல்லது மறுப்பு குறித்த தொடர்புத் தகவல்கள் தொலைதூர மின்னியல் வாக்களிப்பு முறையில் மட்டுமே நடந்தேறும்.

மேற்கூறிய MCAவின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம்/ சேமிப்பகங்கள் ஆகியவற்றில் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே இந்த தபால் வாக்கு அறிவிப்பு மின்னியல் முறை மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது. நிறுவனம்/ சேமிப்பகங்கள் ஆகியவற்றில் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு

செய்யாத மற்றும் தொலைதூர மின்னியல் வாக்கு செலுத்த விரும்பும் உறுப்பினர்கள், இந்த தபால் வாக்கு அறிவிப்பு மற்றும் புகுபதிகை ஐடி மற்றும் கடவுச்சொல்லை பெறுவதற்கு, தயவுசெய்து, குறிப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுங்கள். இந்த தபால் வாக்கிற்காக, பங்குதாரர்களுக்கு கடித நகல், தபால் வாக்கு அறிவிப்பு, தபால் வாக்கு படிவம் மற்றும் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வணிக உறை அனுப்பப்பட மாட்டாது.

நிறுவனச்சட்டம் 2013, பிரிவு 180(1)(a)வின் படி ஒரு நிறுவனத்தின் பொறுப்பேற்புக்களை முழுமையாகவோ அல்லது பெரும்பாலும் முழுமையாகவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பொறுப்புக்களை கொண்ட நிறுவனத்தின் அப்படியான பொறுப்புக்களை முழுமையாகவோ அல்லது பெரும்பாலும் முழுமையாகவோ விற்க அல்லது குத்தகைக்கு விட அல்லது வேறு ஒருவகையில் தீர்வு செய்வதற்கு ஒரு சிறப்பு தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பங்குதாரர்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

வேலூர் மாவட்டம், காட்பாடி, வந்தரந்தாங்கல் கிராமத்தில், சித்தூர் வேலூர் முக்கிய சாலையில் அமைந்துள்ள அதன் நிலம் மற்றும் கட்டிடங்கள் ("சொத்து") பங்களூரு, பார்த் எலக்ட்ரானிக்ஸ் லிமிடட் (BEL) நிறுவனத்துக்கு "எங்கிருக்கிறதோ அங்கு உள்ளது உள்ளபடியே" என்ற அடிப்படையில், ஆண்டுக்கு குத்தகை தொகையாக ரூ. 2.66,99,316/- (ரூ. இரண்டு கோடியே அறுபத்தியாறு இலட்சத்து தொண்ணூற்றுயொன்பது ஆயிரத்து முன்னூற்றி பதினாறு ரூபாய் மட்டும்) நிர்ணயம் செய்து 29 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட நிறுவனம், முன்மொழிந்துள்ளது.

நிறுவனம், வேலூர் மாவட்டம், காட்பாடி வந்தரந்தாங்கல் கிராமத்தில்,

சித்தூர்- வேலூர் முக்கியசாலையில் அமைந்துள்ள அதன் இயந்திரங்கள், மற்றும் அதன் அனைத்து நிலையான சொத்துக்கள் ("நிலையான சொத்துக்கள்") அனைத்தையும் "எங்கிருக்கிறதோ அங்கு உள்ளது உள்ளபடியே" என்ற அடிப்படையில், ஒப்பந்தப் புள்ளி கோரும் நடைமுறையைப் பின்பற்றி விற்பனை செய்வதற்கு மேலும் முன்மொழிகிறது.

சட்டப்பிரிவு 108 மற்றும் விதிகளின் விதி எண்.20 உடன் இணைந்து, அதற்கு இணக்கமாக, அறிவிப்பில் அமைக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது, பங்குதாரர்கள் அவர்களுடைய தொலைதூர வாக்குகளை பதிவு செய்வதற்கு தேவையான வசதிகளை செய்து தருவதற்கு, இந்நிறுவனம் Central Depository Services (India) Limited ("CDSL") என்ற நிறுவனத்தை நியமித்துள்ளது.

ஆகவே கீழே இணைக்கப்பட்டுள்ள சிறப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டபடியான இந்த முன்மொழிதல்களுக்கு நிறுவனம் உங்களது ஒப்புதலைக் கோருகிறது. சட்டப்பிரிவு 102க்கு இணங்க இந்தத் தீர்மானம் எதற்காக முன்மொழியப்பட்டது என்பது குறித்து இந்த தீர்மானம் தொடர்பான பொருள்படத்தக்க அனைத்து உண்மைகள் மற்றும் காரணங்கள் அடங்கிய விளக்க அறிக்கை ஒன்றும் மின்னனு வாக்கு அறிவுருத்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மின்னியல் வாக்களிப்பு காலம் 23ந்தேதி ஏப்ரல் மாதம் 2021 வெள்ளிக்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 9.00 AM க்குத் தொடங்கி 22ம் தேதி மே மாதம் 2021 சனிக்கிழமை இந்திய நேரப்படி, அன்று மாலை 5.00PMக்கு முடிவடையும். அப்போது தொலைதூர மின்னியல் வாக்களிப்பு நிறுத்தப்படும் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வாக்களிப்பது அனுமதிக்கப்படாது.

தபால் வாக்கு / மின்னியல் வாக்களிப்பு நடைமுறைகளை நியாயமான முறையிலும், வெளிப்படையாகவும் நிறைவேற்றும் சோதனையாளராக குழும செயலர்களாக செயலாற்றிக்கொண்டிருக்கும். ஆர்.ஸ்ரீதரன் . அஸ்ஸோசியேட்ஸ் (FCS No. 4775 & CP NO. 3239) சேர்ந்த ஆர். ஸ்ரீதரன் என்பவரை நிர்வாக இயக்குனர்கள் குழு நியமித்திருக்கிறது.

மின்னியல் வாக்களிப்பு நடைமுறைகள் மற்றும் வாக்குகள் சரிபார்ப்பு நிறைவுற்றவுடன், சோதனையாளர் அவரது அறிக்கையை மேலாண்மை இயக்குனரிடம் சமர்ப்பிப்பார். தபால் வாக்குகளின் முடிவு நிறுவனத்தின் ஒரு இயக்குனர் அல்லது குழும செயலாளரால் 24ந் தேதி மே மாதம் 2021 அன்றோ அல்லது அதற்கு முந்தைய தேதிகளிலோ அறிவிக்கப்படும். குறிப்பிட்ட அந்த முடிவுகள், நிறுவனத்தின் பதிவு அலுவலகம் மற்றும் பங்குகள் பதிவு மற்றும் பகிர்வு முகவர் அலுவலகம் ஆகியவற்றில் காட்சிப்படுத்தப்படும் மற்றும் சோதனையாளரின் அறிக்கையுடன் சேர்ந்து நிறுவனத்தின் www.tniel.in என்ற வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

இந்த தீர்மானத்திற்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள், தீர்மானத்திற்கு சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குகளைவிட மூன்றில் ஒரு பங்கிற்கு குறைவாக இருப்பின், இந்த தீர்மானம் ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்படும்.

பெரும்பான்மையின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்த முடிவுகள் தொலைதூர மின்னனு வாக்கு அளிப்பதற்கான கடைசி நாளான 22ம் தேதி மே மாதம் 2021, சனிக்கிழமை அன்று நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். உறுப்பினர்கள் இதை கருத்தில் கொண்டு, அது முறையென்று கருதும் பட்சத்தில் பின்வரும் தீர்மானத்தை ஒரு சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்றும் படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

நிர்வாக இயக்குனர்குழு உத்திரவுப்படி,

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்திற்காக,

ஒப்பம்...

சி.காமராஜ் I.A.S.

நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை

தேதி: 18.3.2021

முன்மொழியப்பட்ட தீர்மானம் எண். 1.

கருத்தில் கொண்டு. முறையென்று கருதினால், கீழ் கண்ட தீர்மானத்தை சிறப்புத் தீர்மானமாக எந்த ஒரு மாற்றத்துடனும் அல்லது மாற்றமுமில்லாமலும் நிறைவேற்றுதல்

முன்மொழியப்பட்ட தீர்மானம் எண். 1.

நிறுவனச்சட்டம் 2013 ("சட்டம்") பிரிவு 180 (1) (a), பிரிவு 108 மற்றும் பிரிவு 110 க்கும், அத்துடன் நிறுவன விதிகள் 2014, (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) மற்றும் நிறுவனச்சட்டம் 2013 இல் வழங்கப்பட்டுள்ள பொருத்தமான இதர நிபந்தனைகள்;ஏதாவது இருந்தால், (அந்த நேரத்தில் அமலில் உள்ள அதில் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படியான திருத்தங்கள் அல்லது மறு நிறைவேற்றம் உட்பட) அவற்றிற்கும் இணங்க மற்றும் நிறுவன அமைப்பு முறையின் விதிகளும் முறைகளிலும் வழங்கப்பட்டுள்ளவற்றின் படியும் மற்றும் பொருத்தமான மற்றும் தேவைப்படும் வகையில் முறையான அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட அம்மாதிரியான இதர ஒப்புதல்கள், ஏற்புக்கள், மற்றும் அனுமதிகளுக்கு இணங்க நிறுவன நிர்வாகக் குழுவுக்கு (இதன் பிறகு "குழு" என்று அழைக்கப்படும்). அதில் நிர்வாகக்குழு நியமிக்கும் அல்லது இதன்பிறகு அவ்வப்போது நியமிக்கக் கூடிய இந்தத் தீர்மானம் மூலமாக வழங்கப்பட்ட அதிகாரம் கொண்ட எந்த ஒரு உறுப்பினர் குழுவும் உள்ளடங்கியது) இதன் மூலம் உறுப்பினர்கள் வழங்கிய ஒப்புதலின் அடிப்படையில் வேலூர் மாவட்டம், காட்பாடி, வந்தரந்தாங்கல் கிராமத்தில், சித்தூர் வேலூர் முக்கியசாலையில் உள்ள 67.25 ஏக்கர் நிலத்தையும் அத்துடன் அங்குள்ள தொழிற்சாலையில் உள்ள கட்டிடங்கள் உட்பட சொத்துக்களை பங்களூரு, பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துக்கு "எங்கிருக்கிறதோ அங்கு உள்ளது உள்ளபடியே" என்ற

அடிப்படையில், அல்லது நிறுவனத்தின் நலனுக்கு உகந்ததாக நிர்வாகக் குழு கருதும் வேறு எந்த ஒரு வகையிலாவது, ஆண்டுக்கு குத்தகை தொகையாக ரூ.2,66,99,316/- (ரூ.இரண்டு கோடியே அறுபத்தியாறு இலட்சத்து தொண்ணூற்யொன்பது ஆயிரத்து முன்னூற்றி பதினாறு ரூபாய் மட்டும்) நிர்ணயம் செய்து, நிர்வாகம் பொருத்தமானது 'என்று கருதும் விதிகள்

மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 29 ஆண்டுகளுக்கு நிறுவனம் குத்தகைக்கு விட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உறுதியான குத்தகை ஒப்பந்தம் உட்பட ஆனால் அதுமட்டுமல்லாது இதர தேவையான ஆவணங்களை நிர்வாகக் குழு முடிவு செய்யும் எந்த ஒரு நாளிலும் தொடங்கி, எந்த ஒரு வகையிலும் இறுதி செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும், மற்றும் மேலே குறிப்பிட்ட தீர்மானத்தை அமல்படுத்தத் தேவையான மற்றும்/அல்லது விரைவு படுத்தவேண்டிய அம்மாதிரியான, ஆவணங்கள், விஷயங்கள், மற்றும் பொருள்கள், போன்ற இதர நடவடிக்கைகள் ஆகியவை உட்பட ஆனால் எந்தவித வரையறையுமின்றி இந்த நிலம், மற்றும் கட்டிடங்களின் குத்தகை தொடர்பாக எழும் எந்த ஒரு கேள்விகள், இடர்பாடுகள் அல்லது சந்தேகங்களுக்கு அவர்கள் பொருத்தமானது என்று அவர்களின் முழு விருப்பத்தின் பேரில் தீர்வு காண்பதற்கு இதன் மூலம் நிர்வாகக் குழுவுக்கு உறுதி செய்து, அதிகாரம் அளிக்க மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், நிர்வாகக் குழு தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை இதில் வழங்கப்பட்டுள்ள அனைத்து அல்லது, எந்த ஒரு அதிகாரத்தையும் உடன்படிக்கைகள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் முறையாவணங்களை வழங்குவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு

தேவையான ஒப்பந்தங்கள்/ஆவணங்களில் நிறுவனத்தின் பொதுவான முத்திரையிட்டு அளிக்கக்கூடிய நிறுவனத்தின் எந்த ஒரு அதிகாரிக்கும் தேவைப்படும் அதிகாரத்தை வழங்கும், நிறுவனத்தின் எந்த ஒரு இயக்குனர்கள் குழுவிற்கும் அல்லது எந்த ஒரு அல்லது பல இயக்குனர்களுக்கும் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை நிர்வாகக்குழுவுக்கு வழங்க இதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் எண்: 2

கருத்தில் கொண்டு, முறையென்று கருதினால், கீழ் கண்ட தீர்மானத்தை சிறப்புத் தீர்மானமாக எந்த ஒரு மாற்றத்துடனும் அல்லது மாற்றமுமில்லாமலும் நிறைவேற்றுதல்

நிறுவனச்சட்டம் 2013 (சட்டம்) பிரிவு 180 (1) (a), பிரிவு 108 மற்றும் பிரிவு 110 க்கும். அத்துடன் நிறுவன விதிகள் 2014. (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) மற்றும் நிறுவனச்சட்டம் 2013 இல் வழங்கப்பட்டுள்ள பொருத்தமான இதர நிபந்தனைகள்,ஏதாவது இருந்தால், (அந்த நேரத்தில் அமலில் உள்ள அதில் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படியான திருத்தங்கள் அல்லது மறு நிறைவேற்றம் உட்பட) அவற்றிற்கும் இணங்க மற்றும் பொருத்தமான மற்றும் தேவைப்படும் வகையில் முறையான அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட அம்மாதிரியான இதர ஒப்புதல்கள், ஏற்புக்கள், மற்றும் அனுமதிகளுக்கு இணங்க நிறுவன நிர்வாகக் குழுவுக்கு( இதன் பிறகு "குழு" என்று அழைக்கப்படும், அதில் நிர்வாகக்குழு நியமிக்கும் அல்லது இதன்பிறகு அவ்வப்போது நியமிக்கக் கூடிய இந்தத் தீர்மானம மூலமாக வழங்கப்பட்ட அதிகாரம் கொண்ட எந்த ஒரு உறுப்பினர் குழுவும் உள்ளடங்கியது) இதன் மூலம் உறுப்பினர்கள் வழங்கிய ஒப்புதலின் அடிப்படையில் வேலூர் மாவட்டம் காட்பாடி வந்தரந்தாங்கல கிராமத்தில், சித்தூர்- வேலூர் முக்கியசாலையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் இதர சொத்துக்களை "எங்கிருக்கிறதோ அங்கு உள்ளது உள்ளபடியே" என்ற அடிப்படையில், நிர்வாகம் பொருத்தமானது என்று கருதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரி விற்பனை செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானத்தை அமல்படுத்தத் தேவையான மற்றும்/அல்லது விரைவு படுத்தவேண்டிய அம்மாதிரியான, ஆவணங்கள், விஷயங்கள், மற்றும் பொருள்கள், போன்ற இதர நடவடிக்கைகள் ஆகியவை உட்பட ஆனால் எந்தவித வரையறையுமின்றி, இந்த நிறுவனத்தின் சொத்து விற்பனை தொடர்பாக எழும் எந்த கேள்விகள், இடர்பாடுகள் அல்லது சந்தேகங்களுக்கு அவர்கள் பொருத்தமானது என்று அவர்களின் முழு விருப்பத்தின் பேரில் தீர்வு காண்பதற்கு இதன் மூலம் நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

மேலும், நிர்வாகக் குழு, தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை இதில் வழங்கப்பட்டுள்ள அனைத்து அல்லது எந்த ஒரு அதிகாரத்தையும் நிறுவனத்தின் எந்த ஒரு இயக்குனர்கள் குழுவிற்கும் அல்லது எந்த ஒரு அல்லது பல இயக்குனர்களுக்கும் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை நிர்வாகக்குழுவுக்கு வழங்க இதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாகக் இயக்குனர்குழு உத்திரவுப்படி

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்திற்காக,

ஒப்பம்...

சி.காமராஜ் I.A.S.,

நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை

தேதி: 18.3.2021

அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ளவை.

1. சட்டப்பிரிவு 102 மற்றும் 110 க்கு இணங்க, முன்மொழிவு செய்யப்பட்ட சிறப்பு தீர்மானம் குறித்த அறிக்கையில் கண்டுள்ள பொருள் உண்மைகள், அறிவிக்கப்பட்ட தீர்மானத்திற்கான காரணங்கள் அடங்கிய விளக்க அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

2 பொருத்தமான ஒழுங்குமுறை அமைப்பின் தேவைகளுக்கு இணங்க நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு அல்லது சேமிப்பகத்தால் பராமரிக்கப்பட்டுவரும், பயன்பெறும் உடைமை உரிமையாளர் பதிவேட்டில் 16ந் தேதி ஏப்ரல் 2021, வெள்ளிக்கிழமை அன்று, பெயர்கள் உள்ள உறுப்பினர்களுக்கு தங்களது மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்தில் அல்லது சேமிப்பகத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டும் தபால் வாக்களிப்பு அறிவிப்பு மின்னியல் மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

3 ஏப்ரல் 2021, வெள்ளிக்கிழமை 16ம் தேதியில் உறுப்பினருக்குள்ள மூலதன சரி ஒப்புப் பங்குகளின் விகிதாச்சார அடிப்படையிலான வாக்களிக்கும் உரிமைக்கேற்ப வாக்கு எண்ணிக்கை கணக்கிடப்படும். தொடர்புள்ள தேதியில் பங்குதாரர்களாக இல்லாதவர்கள், இந்த அறிவிப்பினை, ஒரு தகவல் நோக்கமாக கருத வேண்டும்.

4. நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் 110 மற்றும் அவற்றில் வழங்கப்பட்டுள்ள பொருத்தமான இதர நிபந்தனைகள், மற்றும் நிறுவன விதிகள் 2014, (மேலாண்மை மற்றும் நிர்வாகம்)ஆகியவைகளுக்கு விதி 20 மற்றும் 22க்கு இணங்க நிறுவனமானது தனது அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னியல் வாக்களிப்பு முறையை ஒரு விருப்பத் தேர்வாக வழங்குவதில் மகிழ்ச்சி கொள்கிறது. மின்னியல் வாக்களிப்பு முறையை மேற்கொண்டு தங்களது வாக்குகளை செலுத்த உறுப்பினர்களுக்கு வசதி செய்யும் பொருட்டு CDSL உடன் ஒரு ஒப்பந்தத்தை நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

மின்னியல் முறையில் தங்களது வாக்குகளை செலுத்தும் தேவைகளுக்கு, உறுப்பினர்கள் தயவு செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பார்க்கவும்.

5. தபால் வாக்கு அறிவிப்பு நிறுவனத்தின் www.tniel.in என்ற வலைத்தள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ளது.

6. தபால் வாக்கு மூலம் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒரு பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகவே கருதப்படும்.

7. தபால்வாக்குகளின் செல்லத்தக்க தன்மைக்குறித்து சோதனையாளரின் முடிவே இறுதியாக இருக்கும்.

8. சோதனையாளர் தனது சோதனையை முடித்த பிறகு அவரது அறிக்கையை மேலாண்மை இயக்குனரிடம் சமர்ப்பிப்பார். மற்றும் தபால் வாக்குகள் மூலம் கிடைத்த முடிவுகள் 24ம் தேதி, மே மாதம் 2021, திங்கள் கிழமை அன்று அல்லது அதற்கு முந்தைய தேதியில், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் மேலாண்மை இயக்குனர், அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எந்த நிறுவன இயக்குனராலும் அறிவிக்கப்படும். மற்றும் அது நிறுவனத்தின் www.tniel.in என்ற வலைத்தள முகவரியிலும் வெளியிடப்படும் மற்றும் அந்தக் குறிப்பிட்ட நாளில் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருக்கு அறிவிக்கப்படும்.

9. பெரும்பான்மையின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்த முடிவுகள் தொலைதூர மின்னனு வாக்கு அளிப்பதற்கான கடைசி நாளான 22ம் தேதி மே மாதம் 2021 சனிக்கிழமை அன்று நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.

10. அறிவிப்பில் குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களும் விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அனைத்து பொருளடக்க ஆவணங்களும் மின்னனு முறையில் ஆய்வுக்கு கிடைக்கும். இதற்கு பங்குதாரர்கள் tnielmf@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் கோரிக்கை அனுப்ப வேண்டும்.

11. மின்னியல் வாக்களிப்பு நடைமுறைகளை நியாயமான முறையிலும், வெளிப்படையாகவும் நிறைவேற்றும் சோதனையாளராக,

குழுமசெயலாளராக செயலாற்றிக்கொண்டிருக்கும் ஆர்.ஸ்ரீதரன்(FCS NO. 4775) என்பவரை நிர்வாக இயக்குனர்கள் குழு நியமித்திருக்கிறது.

12. மின்னியல் வாக்களிப்பு காலம் முடிந்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு மிகாத காலத்திற்குள் சோதனையாளர், நிறுவனத்தில் பணிபுரியாத குறைந்த பட்சம் இரண்டு (2) சாட்சிகளின் முன் வாக்குகளைத் திறப்பார். மற்றும் தீர்மானத்திற்கு சாதகமாக அல்லது எதிராக வாக்குகள் ஏதாவது அளிக்கப்பட்டிருந்தால் அதுபற்றிய, அறிக்கையை உடனடியாக நிறுவனத்தின் இயக்குனருக்கு சோதனையாளர் அளிப்பார்.

13 தபால் வாக்குகளின் மின்னியல் வாக்களிப்பு நிறைவுற்ற ஏழு (7) நாட்களுக்குள் அதன் முடிவுகள் சோதனையாளரின் அறிக்கையோடு சேர்த்து நிறுவனத்தின் வலைத்தளம் www.tniel.in மற்றும் CDSL வலைத்தளம் ஆகியவற்றில் வெளியிடப்படும்.

14. மின்னியல் வழியாக வாக்களிக்கும் பங்குதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் பின் வருமாறு

(i) வாக்களிப்பு **23ம்** தேதி **ஏப்ரல் 2021, வெள்ளிக்கிழமை அன்று 9.00** am தொடங்கி **22ந்** தேதி **மே மாதம் 2021, சனிக்கிழமை** அன்று 5.00pm **க்கு** நிறைவு பெறும். இந்த காலத்தின் போது, **16ந் தேதி ஏப்ரல் 2021, வெள்ளிக்கிழமை அன்று (பதிவு நாள்)** பங்குகளை தாள் வடிவத்தில் அல்லது. டிஜிட்டல் வடிவத்தில் வைத்திருக்கும் நிறுவனத்தின் பங்குதாரர்கள் அவர்களது வாக்குகளை மின்னியல் வழியாக செலுத்தலாம். அதன்பிறகு மின்னியல் முறை வாக்களிப்பு CDSL ஆல் முடக்கப்படும்.

(ii) பங்குதாரர்கள் மின்னியல் வாக்களிப்பு வலைத்தளமான www.evotingindia.com இல் புகுபதிகை செய்யவேண்டும்.

(iii) பங்குதாரர்கள் என்பதில் சொடுக்குங்கள்

(iv) இப்போது உங்கள் பயனர் ஐடி யை உள்ளிடுங்கள்.

a. CDSL க்கு : பயனாளரின் 16 இலக்க ஐடி
b. NSDLக்கு : DP ஐடியின் எழுத்தைத் வைத்திருக்கும் வாடிக்கையாளரின் 8 இலக்க ஐடி

c. பங்குகளைத் தாள் வடிவத்தில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் நிறுவனத்தில் பதிவு செய்திருக்கும் இணைப்புத்தகை எண்ணை (ஃபோலியோ நம்பர்) உள்ளிடவேண்டும்.

(v) அதற்கடுத்து காட்சிப்படுத்தப்பட்டபடி உருவ உள்ளிடுங்கள் மற்றும் புகுபதிகையை சொடுக்குங்கள்.

(vi) பங்குகளை டிமேட் வடிவத்தில் நீங்கள் வைத்திருந்து மற்றும் www.evotingindia.com இல் புகுபதிகை செய்திருந்தால் மற்றும் இதற்கு முன்பு ஏதாவது வாக்களிக்கும் நிறுவனத்தில் வாக்கு செலுத்தியிருந்தால், அப்போது உங்களது தற்போதைய கடவுச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(vii) நீங்கள் முதல் முறை பயனராக இருந்தால் பின்வரும் படிநிலைகளை பின் பற்றுங்கள்:

| | |
|---|---|
| | பங்குகளை டிமேட் மற்றும் தாள் வடிவத்தில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் |
| பான் PAN | வருமான வரித் துறையால் வழங்கப்பட்ட 10 இலக்கங்கள். கொண்ட வரிவடிவ PAN எண்ணை உள்ளிடுங்கள். |

| | |
|---|---|
| | • (டிமேட் பங்குதாரர்கள் மற்றும் தாள் பங்குதாரர்கள் இருவருக்கும் பொருந்தும்)<br>• பங்குபெறும் நிறுவனம் / சேமிப்பகம் ஆகியவற்றில் தங்களது PAN எண்ணை புத்தாக்கம் செய்துகொள்ளாத உறுப்பினர்கள் அவர்களது பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களையும் மற்றும் 8 இலக்க தொடர் எண்ணையும் பான் புலத்தில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.<br>• ஒரு வேளை தொடர் எண் 8 இலக்கங்கள் கொண்டதாக இல்லை என்றால் பெயரின் முதல் இரண்டு தலைப்பெழுத்துக்களுக்குப் பிறகு தொடக்கத்தில் தேவைப்பட்ட எண்ணிக்கையில் "0" எண்ணை சேர்த்துக் |

| | |
|---|---|
| | கொண்டு எண்களைப் பூர்த்தி செய்யவும். உதாரணம்: உங்கள் பெயர் ரமேஷ் குமார்(RAMESH KUMAR) என்றும் மற்றும் வரிசை எண் 1 என்றும் இருந்தால், அப்போது. RA00000001 என்று பான் புலத்தில் எழுதுங்கள். |

(viii) இந்த விவரங்களை முறையாக உள்ளிட்டபிறகு "சமர்ப்பி" என்ற உரையாடல் பெட்டியில் சொடுக்குங்கள்.

(ix) தாள் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் நேரடியாக நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் திரைக்கு செல்வார்கள். இருப்பினும். டிமேட் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், இப்போது கடவுச்சொல் உருவாக்கு" என்ற விவரப்பட்டியவை அடைவார்கள், அதிலுள்ள புதிய கடவுச்சொல் புலத்தில் அவர்களது புகுபதிகை கடவுச்சொல் கட்டாயமாக உள்ளிடவேண்டும். தவிர, வேறு இதர நிறுவனங்களில், வாக்களிக்கும் உரிமையுள்ள டிமேட் பங்குதாரர்கள் அந்த நிறுவனங்கள் CDSL இயங்கு தளத்தின் மூலமாக மின்னியல் வாக்களிப்பை தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் அவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போதும் இந்தக் கடவுச் சொல்லையே வாக்களிக்க பயன்படுத்தவேண்டும். என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் கடவுச்சொல்லை வேறு எந்த ஒரு நபருடனும் பகிர்ந்து கொள்ளவேண்டாம் என்றும் மற்றும் உங்கள் கடவுச்சொல்லை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கடுமையாக பரிந்துரைக்கப்படுகிறது.

(x) தாள் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், இந்த அறிக்கையில் கண்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க மட்டும் இந்த விவரங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(xi) நீங்கள் வாக்களிக்க தேர்ந்தெடுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் பெயருக்கான EVSN இல் சொடுக்குங்கள்.

(xii)வாக்களிக்கும் பக்கத்தில், "தீர்மானத்தின் விவரம்" என்பதை காண்பீர்கள். அதன் மீதே வாக்களிக்கும் விருப்பத் தேர்வுகளாக ஆம்/இல்லை என்பதும் காணப்படும். விருப்பத்திற்கேற்ப ஆம் அல்லது இல்லை என்ற ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். ஆம் என்ற விருப்பத்தேர்வு நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்றும் மற்றும் இல்லை என்ற விருப்பத்தேர்வு நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பொருள்படும்.

(xiii) தீர்மானத்தின் முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் தீர்மானங்களின் கோப்பு இணைப்பின் மீது சொடுக்குங்கள்.

(xiv) நீங்கள் வாக்களிக்க விரும்பும் தீர்மானத்தை தேர்ந்தெடுத்தபிற்கு சமாப்பி என்பதன் மீது சொடுக்குங்கள். அதை உறுதி செய்யும் உரையாடல் பெட்டி ஒன்று காட்சிப்படுத்தப்படும். நீங்கள் உங்கள் வாக்கை உறுதி செய்ய விரும்பினால் “ஓகே” என்பதன் மீது சொடுக்குங்கள் அப்படியில்லை என்றால், 'ரத்து செய்" என்பதில் சொடுக்குங்கள். அதன் பிறகு உங்கள் வாக்கை மாற்றிக்கொள்ளுங்கள்,

(xv) தீர்மானத்தின் மீது உங்கள் வாக்கை உறுதி செய்துவிட்டால், அதன் பிறகு அதை மாற்றியமைக்க நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

(xvi) வாக்களிக்கும் பக்கத்தில் உள்ள "அச்சு செய்ய இங்கு சொடுக்கவும்" என்ற விருப்பத்தேர்வில் சொடுக்குவதன் மூலம் உங்கள் வாக்குகளின் அச்சுப் பிரதியை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

(xvii) டிமேட் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் மாற்றப்பட்ட கடவுச்சொல்லை மறந்திருந்தால், அப்போது பயனர் ஐடி மற்றும் உருவ சரிபார்ப்பு குறியீட்டை உள்ளிடுங்கள் மற்றும் *"கடவுச்சொல் மறந்துவிட்டது" என்பதில் சொடுக்கி அமைப்பின் தூண்டுதல்களுக்கு உட்பட்டு விவரங்களை உள்ளிடுங்கள்

(xviii) ஆண்ட்ராய்டு இயக்கதளத்தை கொண்ட கைபேசிகளில் உள்ள எம். ஓட்டிங் CDSL கைபேசி செயலிகள் மூலமும் பங்குதாரர்கள் அவர்களின் வாக்குகளைச் செலுத்தலாம் கூகிள் பிளே ஸ்டோரிலிருந்து எம்ஓட்டிங் செயலியை தரவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆப்பிள் மற்றும் விண்டோஸ் கைபேசி பயனர்கள் செயலியை முறையே ஆப் ஸ்டோரிலிருந்தும்

விண்டோஸ் ஸ்டோரிலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். கைபேசி மூலம் வாக்களிக்கும் போது தயவுசெய்து தூண்டுதல் அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்.

(xix) தனிநபர் பங்குதாரர் அல்லாத மற்றும் பொறுப்பாளர்களுக்கான குறிப்பு:

- தனிநபர் பங்குதாரரல்லாதவர்கள் உ-ம் (தனிநபரல்லாதவர்கள், எச்யஎ.ஃப், என்ஆர்ஜ போன்றவர்கள்) மாறும் பொறுப்பாளர்கள் www.evotingindia.com என்ற வலைத்தளத்தில் புகுபதிகை செய்து கொண்டு அவர்களை பெருநிறுவனங்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- நிறுவனத்தின் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் கூடிய ஸ்கேன் செய்யப்பட்ட பதிவுப் படிவம் ஒன்றின் நகல் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்படவேண்டும்.
- புகுபதிகை விவரங்களைப் பெற்ற பிறகு, அட்மின் புகுபதிகை மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி ஒரு இணக்கமான பயனர் ஒருவர் உருவாக்கப்படவேண்டும், அந்த இணக்கமான பயனர் அவர்கள் வாக்களிக்க விரும்பும் கணக்கு(களுடன்) இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.
- புகுபதிகை செய்யப்பட்டதில் இணைக்கப்பட்ட கணக்குகளின், பட்டியலை helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும், அந்தக் கணக்குகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் அவர்களால் வாக்குகளைச் செலுத்தமுடியும்.
- பாதுகாப்பாளர் சார்பாக அவர்கள் வழங்கிய நிர்வாகக் குழு தீர்மானம் மற்றும் பகர அதிகாரப் பத்திரம் (பவர் ஆஃப் அட்டார்னி-POA) ஆகியவை ஏதாவது இருந்தால் அவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் சோதனையாளர் சரிபார்ப்புக்காக, பிடிஎஃப் வடிவில் அமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்!
- மின்னியல் வாக்களிப்பு தொடர்பாக ஏதாவது கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். ஆசாதாரண பொதுக் கூட்டம், மின்னனு வாக்கு திட்டத்தில் மின்னனு வாக்கு அளித்தல் தொடர்பாக ஏதாவது கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், வினாக்கள் ("FAQs") பகுதியில் மற்றும் www.evotingindia.com என்ற வலைதளத்தில் உள்ள

உதவிப்பிரிவில் உள்ள மின்னியல் வாக்களிப்பு கையேட்டை பார்த்துக் தெரிந்து கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு எழுதவும் அல்லது திரு.நித்தின் குந்தர் (022–23058738 ) அல்லது திரு.ராக்கேஸ் டால்வி (022–23058542) அல்லது திரு.மகபூப் லக்கானி (022–23058543 ) அவர்களை அனுகவும்.

- மின்னனு முறையில் வாக்களிப்பதில் உள்ள வசதிகளில் குறைகள் ஏதேனும் இருப்பின், திரு.ராக்கேஸ் டால்வி, மேலாளர் (CDSL) Central Depository Services (India) Limited, A Wing, 25th Floor, Marathon future, Mafatlal Mill Compounds, N.M. Joshi Marg, Lower parel (East), Mumbai 400 013 ஐ அனுகவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 022–23058738 அல்லது 022–23058542 / 43 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

நிறுவனச்சட்டம் 2013 பிரிவு 102 வைப் பின்பற்றிய விளக்க அறிக்கை.

தீர்மானம் எண். 1.

2004 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் இலாபத்தில் இயங்கிவந்தது. அதன் விற்பனையில் 70% அளவில் இருந்த நைட்ரோ கிளிசரின் அடிப்படையிலான வெடி மருந்துகளின் உற்பத்திக்கு இந்திய அரசு தடை விதித்தது. என்ஜி அடிப்படையிலான வெடிமருந்துக்கு மாற்றாக வேறு வெடிமருந்தை நிறுவனம் வெற்றிகரமாக தயாரித்தபோதும், வணிக ரீதியாக சாத்தியப்படவில்லை. சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய வெடிமருந்துகளை தயாரித்ததாலும், விலையில் மிகக் கடுமையான போட்டி காரணமாகவும், அதிக ஊதியம் அளித்துவந்ததாலும் நிறுவனத்திற்கு பெருமளவில் நஷ்டம் ஏற்பட்டது. 2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நிறுவனம் நஷ்டத்தையே சந்தித்து வந்தது. மற்றும் நிறுவனத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள் பலனளிக்கவில்லை. அதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறுவனம் தனது உற்பத்தியை நிறுத்தி வைத்தது. செப்டம்பர் 2017 ஆம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற விரும்பிய தொழிலாளர்களை நிறுவனம் விருப்ப ஓய்வு திட்டம் மூலமாக விடுவித்தது மற்றும் இதர பணியாளர்களை இதர அரசு நிறுவனங்களில் பணியமர்த்தியது. ஒப்பந்த பணியாளர்களை பணியில் அமர்த்தி நிறுவனத்தின் சொத்துக்களை இன்றுவரை நிர்வாகம் காப்பாற்றி வருகிறது. 2019 ஆம் ஆண்டில் பங்களூருவிலுள்ள பார்த் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், இந் நிறுவனத்தின் நிலம் மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆர்வம்

காட்டியது. இறுதியாக செப்டம்பர் 2019 ஆம் ஆண்டு நிறுவனத்தின் நிலம் மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு அளிப்பதற்கு, அந்த நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நிலத்தின் மதிப்பீடு வேலூர் மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயம் செய்யப்பட்டது மற்றும் கட்டிடத்தின் மதிப்பீடு தமிழ் நாடு பொதுப்பணித் துறையால் நிர்ணயம் செய்யப்பட்டது. மற்றும் குத்தகை வாடகை தொகை தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் நிர்ணயம் செய்யப்பட்டது, தற்போது, BEL உடன் நிறுவனம் பேரம் நடத்தி குத்தகை ஒப்பந்த வரைவு ஒன்றை தயாரித்துள்ளது. நிறுவனத்தின் வசதிகளை குத்தகைக்கு விடுவது நிறுவனத்திற்கு தேவையான வள ஆதாரங்களை மேம்படுத்த முடியும் என்பதால் அது நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு பயனளிக்கும்.

இந்த அறிவிப்போடு இணைக்கப்பட்டுள்ள, நிறுவனச்சட்டம் 2013 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள பொருத்தமான விதிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட சிறப்பு தீர்மானம் ஒப்புதலுக்காக உறுப்பினர்கள் முன் இப்போது சமாப்பிக்கப்படுகிறது. உங்கள் இயக்குனர்கள் இந்த தீர்மானத்தை ஒரு சிறப்பு தீர்மானமாக நிறைவேற்ற பரிந்துரைக்கிறார்கள்.

நிறுவனத்தின் எந்த ஒரு இயக்குனர் மற்றும் முக்கிய நிர்வாகப் பதவியிலுள்ள பணியாளர்கள் அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட உறவினர்கள் ஆகிய எவருக்கும். இங்கு குறிப்பிட்ட சிறப்பு தீர்மானத்தின் மேல் எந்த ஒரு கவலையோ அக்கறையோ இல்லை.

தீர்மானம் எண். 2

BEL உடன் மேற்கொள்ளப்போகும் குத்தகை ஒப்பந்தத்தின்படி, நிறுவனம் நிலம், கட்டிடங்கள் ஆகியவற்றை மட்டுமே ஒப்படைக்கவேண்டும். மற்றும் இதர இயந்திரங்கள் மற்றும் சொத்துக்களை நிறுவனம் அகற்றவேண்டும். ஆகவே, மின்னியல் ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரி முறையான நடைமுறைகளைக் கடைப்பிடித்து அந்த சொத்துக்களை விற்பதற்கு நிறுவனம் முன்மொழிகிறது. அந்த இயந்திரங்களின் மூலம் பெறப்படும் நிதி கடன்தாரர்களுக்கு. மற்றும் சட்டப்படியாக செலுத்தவேண்டிய நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

நிறுவனச்சட்டம் 2013 இல் வழங்கப்பட்டுள்ளவைகளுக்கு இணங்க மற்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு தீர்மானத்தில் கண்டுள்ளவைகள் உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக அவர்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த தீர்மானத்தை ஒரு சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்ற உங்கள் இயக்குனர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

நிறுவனத்தின் எந்த ஒரு இயக்குனர் மற்றும் முக்கிய நிர்வாகப் பதவியிலுள்ள பணியாளர்கள். அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட உறவினர்கள் ஆகிய எவருக்கும் இங்கு குறிப்பிட்ட சிறப்பு தீர்மானத்தின் மேல் எந்த ஒரு கவலையோ அக்கறையோ இல்லை.

நிர்வாகக் இயக்குனர்குழு உத்திரவுப்படி,

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்திற்காக,

ஒப்பம்...

சி.காமராஜ் I.A. S.,

நிர்வாக இயக்குனர்

இடம் சென்னை

தேதி: 18.3.2021